

ஓலை 164| ஓசை 287| மார்ச் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை




தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை**

## பொருள்

இல்லற வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளை உடையவளாகி, தன் கணவனுடைய வருவாய்க்கு ஏற்ப குடும்பத்தை நடத்துபவளே சிறந்த வாழ்க்கைத் துணைவி ஆவாள்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847



Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## வளவ னாயினும் அளவறிந் தழித்துண்!

பாவகை : நேரிசைக் கலி வெண்பா

படிக்கணக்கில் பாலைப் பசுச்சுரக்கு மென்று
மடியறுத்தல் போன்றே மாச்செல்வம் வடித்துவைத்தும்,
மன்னனே ஆயின் மலையளவு செல்வமும்
தின்றுதீர்த்தால் எல்லாமும் சீரழிந்து குன்றுமின்பம்;
என்றுணர்ந்தே போற்றியே எண்ணிச் செலவழித்தே
குன்றிமணி யாயினும் கொற்றவனும் - இன்புற்று
வாழ இருப்பதில் வாழ்வு ஒளிர்ந்திட
ஆழமாய் எண்ணியே ஆய்ந்துமே - வழுவா
தளவாய்ச் செலவிட்டே அழித்துண்ணல் வேண்டும்:
வளமும் பெருக்க வகையாய் - உளமும்
உடலுமே நித்தம் உழைத்தறம் காணல்
தடம்மாறா வாழ்வில் தழைக்க - மடத்தனமாய்
செல்வ மழித்திடாமல் சீர்மையுடன் சேர்த்தேதான்
நல்வழியி லுண்டு செல்வமழி யாமலே
செல்வத்தைக் காத்தலே சீர்!








இலக்கணக் குறிப்பு:

பன்னிரண்டு அடிகளுக்கு மேல் பதின்மூன்று அடிகளுக்கு மேல் பல அடிகள் கலி வெண்பாவில் வரும். இரண்டடிக்கோர் தனிச்சீர் பெற்று வருதல் நேரிசைக் கலி வெண்பாவாகும். இரண்டடிக்கோர் எதுகையைத் தனிச்சீர் உட்பட பெற்று வரும். அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வரும் வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளைப் பெற்று வரும். செப்பலோசைப் பெற்றிருக்கும். சீருக்குச் சீர் காய் முன் நேர் நேர் முன் நிரை, நிரை முன் நேர் என்ற தளைப் பிறழாமல் வரும், ஈற்றடியில் மூன்று சீர்கள் பெற்று, ஈற்றுச் சீர் நாள், மலர்,காசு, பிறப்பு வாய்பாட்டில், ஈற்றசை கு, சு, டு, து, பு,று என்னும் உகர ஓசையில் முடிதல் வேண்டும் சீருக்குச் சீர் குற்றியலுகரம் நோக்க வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்

பாவகை : அறுசீர் விருத்தம் (காய்+விளம்+விளம் )



எண்ணத்தில் நேர்மறை ஏற்றினால்
எண்ணியவை என்றுமே ஏற்றமாம்.
வண்ணத்தில் நல்லவை வார்த்தையாய்
வண்மையுடன் வந்திடல் நன்மையாம்.
அண்ணித்தே பேசினால் அற்றமும்
அண்டத்தில் நீங்கியே அந்திடும்.
பண்புடனே வாழவே பாதையும்
பண்பட்டே நல்வழி காட்டுமே.

கவிஞர் செ. கலைவாணி

# தரிசனம்

தெரு முழுக்க
பக்தர்கள் நின்றபடி
சாமியை தரிசிக்க;
என் தோள்மீது
அமர்ந்திருக்கும்
பிள்ளையை நின்று
தரிசனம் செய்து விட்டு
போகிறது சாமி.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பெண்மை

பாரதி கண்ட கனவுகளும்
வரிகளும் புதுமைப்பெண்களாய்
இன்று பூமியில்

நிமிர்ந்த நடையில் நேர்கொண்ட
பார்வையில் பெண்மை
புதிய விடியலாய் பூமியில்

உடல் பசிக்காக உணவாக
உண்ணப்பட்ட பெண்மை
இன்று எரிமலையின் முகங்களாய்

அடுப்பில் விறகாய் எரிந்த
பெண்மை இன்று உலகத்திற்கே
ஒளிவிளக்காய்

வீட்டுக்குள் விதையாய் பிறந்த
பெண்கள் இன்று நாட்டின்
வளர்ச்சியில் விருட்சங்களாய்

அன்பின் வடிவமான பெண்மை
நமது வாழ்க்கை பாதையில்
நடமாடும் பராசக்திகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அலைபேசி

நீண்ட நாட்களுக்கு பிறகு
உரையாடினாலும்
எங்கள் பயணம் நீளாத பாதை
நொடிக்கு நொடி மாறும்
உறவுகளை காட்டிலும்
எங்கள் பிணைப்பு ஆயுள் வரை
ஓங்கி நிற்கும் தூண்
கூடவே இருந்து துரோகம் செய்யும்
சொந்தங்களை விட
பல மடங்கு உயர்ந்தது
எங்கள் நட்பு
நேரில் காண வாய்ப்பு இல்லாமல்
போகும் நிலையில்
அலைபேசியே எங்களது உயிர் மூச்சு.



கவிஞர் மா. மோனிஷா

# யாதுமானவள் பெண்



ஆடவனே தெரியுமா?
உன் புரிதலை சுற்றி
படர்ந்திருக்கும் மேலோட்டை
உடைத்து எறிய உருவானவள்!
உன் இதயத்தில் வியக்கத்தக்க
ஆனந்தக் களிப்பை ஊட்டவந்தவள்!

உன் உடலில் நடக்கும் பருவ மாற்றங்களின்
விளைவில் எழும் உபாதையை
தன்னுயிர் மருந்து தந்து குணப்படுத்துபவள்!

உன் வாழ்வின் கோடையிலும் குளிரிலும்
வறட்சியிலும் உன் இலைகள் உதிர்ந்துவிடாமல்
தன் நீர் ஊற்றி பசுமை செய்பவள்!

அவள் பிம்பம் கூட உனக்குப் பாடலிசைத்து
உன்னை உறங்க வைக்கும்!
அவள் மலர்த்தோட்டம் உனக்காய் எப்பொழுதும்
மணத்து உன்னை மயக்கும்!

அவள் அக்கினி உன் பாதையில்
தீபமேற்றி வழிநடத்தும்!
அவள் பெண்மை உனக்காய்
அக்கறையுடன் நொடிதோறும் துடிக்கும்!

தாயாய், தமக்கையாய், தோழியாய்,
ஆசிரியையாய், காதலியாய், மனைவியாய்,
மகளாய், தாதியாய்!

இவற்றிற்குக் கைமாறு
அவள் கேட்பது ஒன்றுமட்டும்தான்
அவள் ஆன்மாவின் யாழை
நீ இசைக்க முற்படுகையில்

உன் இதயத்தைக் கேள்
உன் விரல்களைக்கேள்

அவளை அன்பால் இசைக்க
உனக்குத் தகுதி இருக்கின்றதா என்று
இல்லை எனில் உன்னை
அவளிடமே தந்து தகுதிபடுத்திக்கொள்!

கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

# நாணம்

நட்பிற்கு இலக்கணம் சொல்லும்,
துன்பத்திலும், துயரத்திலும்,
தோள் கொடுக்கும் தோழனாக!
மலரினும் மெல்லிய பூவையரிடத்தில்
கண்ணியம் காக்கும் நண்பனாக!
வாழ்வின் பாதியை முழுமையாக்கும்
துணையிடம் நம்பிக்கை வைத்து
தன்னைக் கொடுக்கும் கணவனாக!
அவளது வலியையும்,வேதனையையும்
தூக்கிச் சுமக்கும் சுமைதாங்கியாக!
தாயைப் போல பெற்ற மகளை
அன்பால் குளிப்பாட்டும் தந்தையாக!
மகனுக்கு உலகைப் புரியவைக்கும்
அறிவு நிறைந்த ஆசானாக!
உடன்பிறந்தோருக்கு ஓடி ஓடி
வலிய உதவும் சகோதரனாக!
எத்தனை எத்தனை வேடம் தரித்தாலும்
பெற்றவர்களுக்கு என்றென்றும் குழந்தையாக!
விதவிதமாய் வேடங்கள் மாறினாலும்
உள்ளம் மட்டும் ஒன்றாக!
அன்பாலும், பாசத்தாலும், கருணையாலும்,
இரக்கத்தாலும் நிறைந்திருக்க!
அதை  நாம் உணர்ந்து, புரிந்து
நிஜமான வார்த்தைகளால் நன்றி என்றிட!
விரலால் தலைக்கோதி, முகம் திருப்பி,
அண்ணாந்து பார்த்து உதட்டோரம்
புன்னகை மலர!
கம்பீரமான ஆண்மகனுக்கும்
வருமே நாணம் அழகாக!
யார் சொன்னது நாணம்
பெண்ணுக்கு மட்டுமே உரியதென்று?



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119



பெண்ணின் பிறப்பு பூமியின் விடியல்
பேரொளிப் பூத்திடும் மனிதனின் முதற்கதிர்
கட்டுப்பாடுகள் கட்டை வேலியாய் வந்தாலும்
கண்ணியமே காப்பாள் காப்புக் கோட்டையாய்.

சுமைகளில் சுருங்கா சுடரொளி மனமே
சூரியனைச் சுமக்கும் சக்தியும் பெண்ணே
மௌனத்தின் மறைவில் மறைந்த குரலல்ல
மாறுதலின் மொழியாய் முழங்கும் சத்தம்.

கல்வியின் கருவியால் கனவுகளைச் செதுக்கி
காலத்தின் கரத்தில் விதியை எழுதி
வீடே என்றும் சிறையே அல்ல.
விழியாள் விரியும் உலகே வீடு.

தாயாக தாங்கும் தெய்வமும் அவளே
தோழியாகத் தழுவும் தென்றலும் அவளே
பணியிடைப் பாதையில் பதித்த அடிகள்
பாரம்பரியப் பாறைகளை பிளந்து எறிவாள்.

சாதிக்க முடியாது என்றும் கூறாமல்
சாதனைச் சுடரை சாம்பலாய் மாற்றும்
சமத்துவம் கேட்கும் குரலில்லை அவளின்
சமுதாயம் கற்றிடும் பாடமும் அவளே.

கண்ணீரைக் கனியாக்கும் கலங்காத உள்ளம்
காயங்களை கவசமாக்கும் துணிவும் கொள்வாள்
பெண்ணியம் என்பது போராட்டம் இல்லை
பொறுப்பின் பொற்கொடி பறக்கும் விழாவே.

மரியாதை விதைக்கும் மண்ணே அவளே
மனிதம் மலரும் மழையே அவளே
சங்கிலியைச் சிதைக்கும் சிந்தனைக் கொண்டு
சமநிலைக் காக்கும் சாதனைப் பெண்ணே.

பெண்ணியம் காப்போம் பேரின்பம் அடைவோம்
பேதமை இல்லா உலகம் படைப்போம்
பொறுமை என்றும் பெண்ணியத் தாலே
பொறுத்திடும் மாண்பு மாதவர் தன்னில்.

கவிஞர் முனைவர். ரவி சீனுவாசன் (எ) பகலவன்

# அதிகாலைப் பனி



அதிகாலைப் பனியும்
ஆயிழை நினைவும்
சில்லிடும் தென்றலில்
சிந்தையும் குளிர்ந்திடுமே

சிறகுகள் முளைத்திட
சிந்தனையது சிறகடிக்குமே
சிறுபார்வைதனில் இதயமும்
சிலிர்ப்பாகும் நித்தமுமே

சின்னவளே என்னவளே
சிறுநகையால் வீழ்த்தினாயே
ஆனந்தம் என்னுள்ளே
ஆரவாரமானது உன்னாலே

ஏந்திழையே உள்ளத்தில்
ஏக்கமது தீர்ந்ததே
எண்ணத்தின் ஓசையில்
எழுந்திடும் ஆசையதுவே

வஞ்சியுன் வனப்பினிலே
வசமானேன் அன்பே
மயக்கும் மான்விழியாளே
மனதைத் துளைத்தாயே

அதிகாலைப் பனியிலும்
ஆயிழையுன் நினைவுகளே
மறந்ததில்லை கனவிலும்
மறையவில்லை உன்முகமே

நினைவலைகளாய் மலர்கிறதே
மன்மதனின் துணையோடு
காதலும் கனிவாகிட
புன்னகையும் பூத்ததே

ஓராயிரம் கவிதைகளில்
ஓய்ந்திடாத எண்ணங்களே
தணலான உள்ளமதை
தணித்திட்டக் காரிகையே

வரவாகி வந்துவிடு
வசந்தமதைத் தந்திடவே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்



ஊழ் உறுத்த உருக்குலையும் ஊர்
உறுபகை சூழ உதிரும் தளிர்
தழல் தீண்ட கருகும் தாவளம்.
தீது வீழ நன்மை எழும்.

கவிஞர் ஒச. தமிழ்நேயன், தமிழ்நாடு

# இணையும் குடும்பம்



பாசத்தின் பாலம் கட்டும்
புன்னகை நிறைந்த வீடு அது.
சேர்ந்து நின்ற இதயங்கள்
சிறிய சிரிப்பில் உலகம் காணும்.

வேராய் நம்பிக்கை, விழுதாய் உறவு,
வாழ்வை நிமிர்த்தும் ஆதரவு — குடும்பம்.
கைகளை இணைத்தால் சக்தி,
மனங்களை இணைத்தால் மகிழ்ச்சி;

ஒன்றாய் நடந்தால் வாழ்க்கை
ஒளிமயமான பாதை ஆகும்.
குடும்பம் — இணைந்தால் இன்பம்,
பிரிதலில் தொலைந்து போகும் உணர்வுகள்.

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# சுகமான சுமை

சுமை எங்கோ
சுகம் காண்பீர்
சுற்றம் தந்த சுமை
சோதனை தந்து
போதனை செய்யும் சுமை


அன்பின் ஆழம்
நேசத்தின் பகிர்வு
பிறர் நலம் காத்திடும்
பொறுமையோடு சுகம் காணும்

அன்பு இல்லையேல் ஒன்றும் இல்லை
அன்பை அணைத்தேன்
அகிலமும் எனதாக கண்டேன்
சுமை இல்லை சுகம் கண்டேன்

தாயின் வயிறு பத்து மாத சுமை
தருவது இறுதியில் சுகமே
அவனியில் சுமைகள் பல
அன்பொன்றே அதன் தளை

வேதனை சோதனை இடையே
விளையாடும் மைதானம் ஒன்று
சுமைகள் பல தோணலாம் அன்று
சுமப்பது கண்டே இன்பம் பெறலாம்

விரும்பி நின்றேன் சிலுவை சுமந்தேன்
சிலுவையில் வெற்றியதை பார்த்தேன்
சுமை என்று ஓடிடவில்லை
சுகம் தந்தது சிலுவை சுமையோடு சுகமாக



கவிஞர் திருமதி. ஜீவனிந்ரா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# முதன்மை மொழி

பிற கலவை மொழி இருந்திட்ட போதிலும்
நான் கண்ட இனிய மொழி தமிழ் மொழியாம்

அனைவருக்கும் அழகாய்
வாயினுள் நுழையும் மொழியாம்

சிறியோர் முதல் பெரியோர் வரை
இலகுவில் பேசிடும் மொழியாம்

இறைவானால் கிடைத்த பேரருள் மொழியாம்
தமிழ் அன்னை தந்த ஆருயிர் மொழி இதுவாம்

அ முதல் ஔ வரை குழந்தைகள்
பாட்டிசைத்திடும் அருமை மொழியாம்

கொஞ்சி பேசிட மீண்டும் கேட்டிட
விரும்பிடும் மொழியாம்

எம்மை காத்திடும் இன்றுவரை
தமிழ் மொழியாம்

அழகிய வர்ணிப்பால்
கவிதை படைத்திட சிறந்த மொழியாம்

பிற மொழி கலவையிலும் யாம் அறிந்த
சிறந்த மொழியாம் தமிழ் மொழி

காலத்தால் அழியாத பொக்கிஷமாம்
என் தாய் மொழி  தமிழே!




கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

# தங்கத்தின் மோகம்

மங்கையர் மனதை மயக்கிய மோகமாய்
எங்கும் விலையேற்றமாய் எல்லையின்றி உயருதே
தங்கத்தின் விலையைதன் பொருட்டாய் எண்ணாமல்
வாங்கிக் குவிக்கின்றனரே வாடிக்கை உணர்வாகவே

மழலையர் முகத்தில் மலர்ச்சியை உண்டாக்கும்
எங்கும் பொங்கிடும் எழுச்சி பெருக்காகவே
வருங்காலம் சிறக்கவே வாங்கியே வைத்து
பெருமை மனதாய் பெருக்கெடுக்கும் உள்ளமாய்

தயங்கிடும் உள்ளமும் தடுக்காமல் வாங்கிடும்
மயக்கத்தின் சிறப்பாய் மனதும் மலருமே
அணிகலன் சூடிடும் அசத்தல் விதமாய்
பணியுமே அனைத்தும் பலவிதமான நகைகளாகவே

வசதி படைத்தோர் வளமாய் அணிவர்
கசந்த மனதோர் கவரிங் தேடுவாரே
திருட்டு பெருக்க திரண்ட நகைகளை
உருண்ட சத்தமின்றி உருட்டாமல் திருடுவாரே

கடன்வாங்கி அணியும் கணக்கில்லா பொன்னால்
கொடுக்க முடியாமல் கொள்கையில் வருத்தமே
ஏற்றம் விண்ணை ஏறாமல் தொட்டே
காற்றாய் அலையுதே கண்மூடித்திறக்கு முன்னே

பாதுகாப்பாய்வைத்திருந்தால்பாதிப்பின்றிவாழலாம்
நித்தம் மனதும் நிலையின்றி தவிக்குதே
போதுமான நிலையாய் போராடிய வாழ்க்கை
மீதநாட்களில் நிம்மதியாய் மீண்டு எழுவோமே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# வாழ்க்கை



சத்தமின்றி ஓடிக்கொண்டிருக்கும்
மெல்லிய நீரோடையில்
கால் பதிக்கும் முன்
நிதானிக்கும் கணத்தில்

நீர் நனைத்த மண்ணை தழுவிய
காற்று வந்து தழுவியதும்
மென் தோலின் உயிர் காந்தத்தில்
தோன்றிடும் மெல் அதிர்வுகளில்

உச்சி வெயிலின் தாக்கத்தை
கடத்திக் கொள்ளாத நீரின் மெத்தனம்
நீரின் சுழற்சியில் அழகாய்
செதுக்கிக் கொள்ளும்
கூழாங்கற்களை கண்டதும்

உலக கவலைகளில் இருந்து
சற்றே விடுபட்டு உன்மத்தமாகிடும் மனம்

வலிகளின் வடுக்களுக்குள் வீழ்ந்திடாது
முதிர்வின் சாயலை அழகாக்கிடும்
புன்னகை ஒளிரும் கண்கள் வழியே

ஏதோவொரு பூர்வ பட்சத்தின்
மிச்ச பெருநேச பெருவெளிக்குள்
வாழ்ந்து கொள்கிறது வாழ்க்கை.


கவிஞர் சாந்தாதேவி, சென்னை

# தொலை தூரக் காதலே

## (நினைவின் ஏக்கம்)

காணாத ஏக்கம்
கரையுது விழியில்
கண் சேராமல் தூக்கம்
கலையுது இரவில்

தனிமைத் தழுவலில்
தவிப்புகள் கூடுதே
நெஞ்சின் ஓரமே
பாரம் தவழுதே



பிரிவின் தணல் எரிகுது
குளிர் நிலவின் ஒளியும்
நினைவை எரிக்குது

வேலை தேடி எங்கோ போக,
வேளை தோறும் நானே
வறண்ட நிலமென ஆகினேனே

அல்லும் பகலும் நாமே
வேதனை வேள்வியில்
ஒன்றுபட்டு வாடினோமே

அலைபேசியில் முகம் பார்த்து
தொலைவில் குரல் கேட்டு
தொடருதே இங்கொரு
காதல் கதை

வானம் பாடியே, வாராயோ
ஒன்றாய் ரெக்கை விரிக்கவே
என் திசை தேடியே

இயற்கை சாட்சியே
காணும் யாவும் இங்கே
உந்தன் காட்சியே

அலைபாயும் இதயமே
இளைப்பாற
தோள் கொடு அருகில்
என் தொலை தூரக் காதலே

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# மனிதம்



எது மனிதம்?
திக்குத் திசையற்று
எதுவுமே பேச முடியாமல்
யாராவது எதையாவது
கேட்டுவிட்டால்
கண்ணீரைக் கொட்டித்
தீர்த்துவிடுவோமே என்று
ஏங்கிக்கொண்டிருக்கும்
உயிர்களுக்கு அருகிலிருந்து
ஆறுதலாய் ஓரிரண்டு
வார்த்தைகளைப் பேசுவதில்
நமக்கொன்றும் குறைந்துவிடப்
போவதில்லையே

கரங்களை அன்பாய் இறுகப்பற்றி
வேறொன்றும் பேசத் தேவையில்லை
கொஞ்சம் சொல்வதையெல்லாம் கேட்டுவிட்டு
'கவலைப்படாதே! அனைத்துமே சரியாகிவிடும்'
என்கின்ற ஓர் ஒற்றை வார்த்தையை
எத்திவிட்டுச் செல்வது தானே மனிதம்.

கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

# மோகத்தை முனி

இவ்வுலக வாழ்வின்
இகமதை நிறைத்தே.
புறவாழ்வினில் பறக்கும்
புசித்திட துடித்திடும்.

ஆசைச் சிறகினை
ஆழமாய்க் களைந்தே.
மனித வாழ்வின்
மகத்துவம் உணர்வோம்.

புனிதனாய் பறந்திட
புறத்தினை துறந்திடு.
நிலையற்ற வாழ்வில்
நிசங்களை எதிரிடேன்.

மனதில் பெருகும்
மாசினை மறந்து.
சிற்றின்பம் துறக்க
பேரின்பம் தேடி.

எதிர்காலம் வளமையாய்
என்றுமே சிறக்க
நிம்மதியின் வலனத்தில்
நிலாக்களில் உலா.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# முத்திரை மொழி

அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில்
உயிரியல் கோட்பாட்டின் உயர்மொழி
ஐம்புலன்களும் ஐயுணர்வும்
ஐம்பூதங்களின் கட்டமைப்பு

அண்டத்தின் ஐம்பூதத்தை பிண்டத்தில்
அறிந்திட உதவிடும் சாந்தமொழி
ஐவிரல் நுனிதனில் முடிந்திடும்
நரம்பு அணுக்களில்

நிறைந்திருக்கும் ஐம்பூத ஆற்றல்
இயல்பாய் இணைத்திட அகன்றிடும் குறைபாடுகள்
தொட தொட மலரும் விரல் நுனி
பேசிடும் மருத்துவ மொழி

நீரின்றி அமையாது உலகு
சுண்டு விரல் நீரின் பிரதிபலிப்பு
நிலத்தின் வழிதான் வாழ்வியல்
மோதிர விரலில் மண்ணின் மகத்துவம்

ஆகாயத்தின் தன்மையாம் உயிராற்றல்
நடுவிரலில் நங்கூரமிடும்
காற்றின் போக்கிலேயே காயம் கல்பமாகும்
ஆட்காட்டி விரலில் காற்றின் சூக்குமம்

நெருப்பின்றி ஏது தொடக்கமும் முடிவும்
கட்டை விரலின் இருப்பே நெருப்பு
ஐவிரல்களின் நீட்டலும் மடக்கலும் குவிப்பும்
விரிப்புமாய் ஐம்பூதங்கள் பேசிடும் மௌன மொழி!

நாடி நரம்பின் நாதம் மீட்டி
ஆயுள் காக்கும் ஆரோக்கிய மொழி
உடல் மனம் உயிர் காக்கும் உன்னத மொழி
வாராவாரம் அறிவோம் அகம் புறம் காக்கும்
அதிசய யோகத்தின் முத்திரை மொழி!




கவிஞர் சாந்தாதேவி, சென்னை

# பெண்ணின் பெருந்தக்க யாருள?



அவளன்றி யாருக்கு ஆற்றல் உள?
அவளின்றி பெருமை என்ன உள?
சக்தியும் யுக்தியும் ஒருங்கே எங்குள?
இம்மண்ணில் மகத்துவம் யாருக்குள?

ஊண் கொடுத்தவள் உயிர் கொடுத்தவளன்றோ?
உயிரும் உணர்வும் ஊட்டியவளன்றோ?
யாதுமாகி நின்றவள் அவளே!
யமுனை சரஸ்வதி கங்கை காவிரி அவளே!

நம்முள் ஜீவனாய்
நம்முள் பிரவாகமாய்
நம்மை படைத்த பிரம்மனாய்
பூமிப்பந்தின் பிரமாண்டமாய் அவளே!

அணுவின் பருப்பொருள் போல
அவனியின் கருப்பொருள் அவளே!
சுடரை சூல் கொண்டவள்!
தன் சுகத்தை புறந்தள்ளியவள்!

பாதி ஜீவன் அல்ல அவள்!
வாழ்வின் நாதம் அவள்!
மகிழ்வில் சங்கீதம் அவள்!
மறுதலிக்க முடியா மகத்துவம் அவள்!

சிருங்காரம் அல்ல அவள்!
சிங்காரம் அவள்!
மானுட பெரும்பேறு அவள்!
எந்நாளும் உருளும் தேர் அவள்!

தேரோடும் வீதியில் தேவதை அவள்
தேவன் சந்நிதி தேரும் அவளே!
பிரபஞ்ச மகிழ்ச்சியும் அவளே!
பிரபஞ்ச இரகசியமும் அவளே!

அவளின் மடி தவழ்ந்து
அவளின் அடி தொழுது
அவளின் குடி பிறந்து
கோட்டை ஏறி கோலோச்சுகிறது மானுடம்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

நிதிதனைத் சேர்த்திடவே நித்தமும் ஓட்டம்!
மதிதனில் சோர்வுடனே மாற்றமிலா துன்பம்!
ஓடியோடிப் பெற்றதை ஒழித்திடின் ஆசையில்
நாடியெவரைக் கேட்பதோ நகைப்பரே யாவரும்!

காலம்வரை தேவைக்குக் கட்டுப்பாடு விட்டால்
ஞாலமிதில் வாழ்வே ஞமலிக்கு இணையாய்!
அனாவசியத்தைத் தவிர்த்தலே அவசியம் இன்று!
அத்தியாவசியத்தைத் தேடுங்கள் அவசியம் நன்று!




கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

## சிறை

ஒளிரும் ஆன்மாவுக்கு - இவ்
யாக்கை ஒரு சிறை!
இறைக் காதலனுக்கு - இம்
மெய்யே பெரும் பாரம்!

## போதும் கண்மணி




தளர்ந்து தவித்து
சலித்து குமைந்து
கிடக்கும் வேளையில்
உன்னொரு "நலமா"
எனுங்குறுஞ்செய்தி
போதும் கண்மணி,
நான்
கிளர்ந்து களித்து
சிலிர்த்து விழித்தெழ
மீண்டு மரணம் வெல்ல!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)



அகர முதல

# அறியாமலிருப்பாளோ?

மௌனத்தின் மடியில் மாய்ந்தேன்,
முகமில்லா முகிலோடு குரல் மறைந்தேன்.
காணாத கண்கள் காற்றில் குழைந்தன,
காதலின் கண்ணாடியில் நான் ஒளிந்தேன்.

வராத வரிகள் வாசலில் ஒளிரும் போது,
சொரிந்த சுரங்கத்தில் சுடராய் நான் இருந்தேன்.
இரவின் இசையில் இமைகள் துயில்வேன்,
எழாத எழுத்துகள் உள்ளம் குளிர்த்தின.

தொலைந்த தென்றலின் தொட்டில் தேடி,
தொடாத தொடுதலைப் பதிந்து நின்றேன்.
அறியாத அன்பின் அறையில் பூட்டி,
அவளெனும் அர்த்தம் நிழலில் வாழ்ந்தது.

கரைந்த கணம் கதிராய் ஒளிரினாலும்,
காலம் எனைக்காக்கும் காவலன் ஆனது.
பார்வையற்ற பாதை பனியில் மூழ்க,
பாதமொரு பதிப்பைப் பதியத் துணிந்தேன்.

எதிரொலி ஏங்கும் இதயம் உள்ளே,
எந்தன் ஏக்கம் எரியாய் மலர்ந்தது.
வருகையற்ற வரம் எனக்குள் வளர்ந்தது,
வானத்தின் விளிம்பில் விளக்காய் நின்றது.

முகமறியாதவள் முகிலாகி வந்து,
மூச்சின் மறைவில் முத்தமிடுவாளோ?
அல்லது அவள் என் ஆத்மா ஆகி,
அருகிலே என்றும் அறியாமலிருப்பாளோ?



கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு

# அங்கீகரிக்கப்படாத ஓவியம்

மங்காத யுத்தம் ஆகின்றது
இம்மங்கையரின் வாழ்வு.

சித்தரிக்கப்பட்ட வாழ்க்கையில்
சித்திரமாகின்றாள்
பலர் வாழ்க்கைக்கு.

சம வாய்ப்பைத் தந்தால்
அனைத்தையும் சமன் செய்து
பாரினையும் ஆளுவோம்.

மாரி பொழியும்
வானினையும் ஆளுவோம்.

அடுப்படியை விட்டால்தான்
அடுத்த படிக்குச் செல்வோமா என்ன?

அடுப்பறிவும் வேண்டும்,
பாரினை ஆளப்
படிப்பறிவும் வேண்டும்.

இவ்விரண்டையும் செயல்படுத்தப்
பொறுப்பறிவும் வேண்டும்.

இன்னல்களால்
கனவுகள் இடிந்தாலும்.



இவள் இளைப்பாற
இடைவேளை தேவையில்லை.

தடை செய்த இடைக்கற்களை
இடறி விட்டு வாகை சூடுவாள்.

வெற்றிக் கனியைச்
சுவைத்துக் கொண்டிருக்கும்
அங்கீகரிக்கப்படாத ஓவியமாகின்றாள்.

கவிஞர் ம. சந்தியா மனோகரன், சிவகங்கை

(1)
குறை ஒன்றும்
எனக்கு இல்லை கோபாலா!
என்னைத் தன்மயமாக்கா
குறை உனதே பூபாலா!

(2)
அற்பர் சிறுமையால்
வெறுப்பினைப் புரிவார்;
பெரியோர் பொறுத்துச்
செருக்கினை அறுப்பார்.

(3)
மாதவனைக் காணத்
தவிக்கும் மனமே!
மாதவம் செய்திடத்
தயங்குவது ஏன் மனமே?

(4)
கற்பகத் தரு என்றே
வழித்துணையை நினைத்தேன்;
காஞ்சிரத் தரு ஆனது
முன்னை வினைப்பயன்

(5)
பெருமையாய் நினை
பெற்றதைப் பெரிதாய்;
பெறாததை நினைத்து
வருந்தி மாளாதே பெரிதாய்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்



அகர முதல

# எரியும் ஈரான்

மையிருட்டை மாய்ப்பதற்குச்
தற்செயலாய் நிகழ்ந்த
அதிசயக் கண்டுபிடிப்பு - ஆதி நெருப்பு!

நெடும் கானகத்தில் தனித்து உலாவி,
நினைவு தவறி, நித்திரை தொலைத்து,
அழகிய நதியைத் தேடி, நெடுநாட்களுக்குப் பிறகு
சுனைநீர் பருகி நிமிர்ந்த போது,
உறக்கம் களைந்த வேங்கையொன்று
உணவு தேடி வேட்டைக்கு வந்து
வீழ்த்தியது மானிடனை.

இருக்குமிடம் தொலைக்க,
இனங்கள் அழிக்க,
குருதியில் மிதக்கவிட,
ஏவுகணைத் தாக்குதலில்
நாளும் பொழுதும் பார்க்காமல்,
நாகரிக வளர்ச்சியின் பெயரால்
நடக்கும் யுத்தங்களால்
வண்ணத்துப்பூச்சிகளின் கனவுகள்
பிறக்கும்போதே கருகிப் பொடிந்து
காட்சியாகிறது நவநாகரிக உலகம்தனில்...!



நீதிமான்களின் நீர்த்துப்போன
நியாயம் அத்தனையும்
உளுத்துப்போன விறகாய் உடைகையில்,
எங்கிருந்து பிறக்கும் ஏதுமற்ற
ஏழைகளின் உரிமை?

கதியற்றவர்களின் உரிமைக்குரலாய்
பொதுவுடைமை பிறக்கையில்,
புல்லர்களின் குருதியைக் கொண்டே
செங்கொடியின் சங்கநாதம்
வரலாற்றின் பக்கங்களில்
வரவு வைக்கப்படும்!

இன்று எரிகிறது ஈரான்!

அனேக ஈரான்கள்
நாளை விடிந்திடும் பொழுதென நம்பியே
விடியலின் கிழக்கு வெளுக்கிறது!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# இலவயம் ஏலேல்

உயரமில்லா உன் இருப்பில்
இலவயம் வேண்டாமே
உன் வியர்வை சிந்தி உழைத்திடு
அதுவே உன் உழைப்பை மதிப்பாக்குமே

இலவயம் பெற்ற நிழலில் வீற்றிருந்தால்
உன் இலட்சியமே கரைந்து போகுமே
இலகுவாய் கிடைத்து விட்டால்
அலட்சியமாய் ஆகிடுவாயே

மறந்திடாதே உன்னையே
அணைத்திடாதே உன் கனவை
அடையாளத்தை அறிந்துணர்ந்த
நீயே இளவயத்தால்



இழப்பை பெற்றிடாதே
உழைப்பையே தனதாக்கிடு
முயற்சியோடு முயன்றாயென்றால்
தடைகளோடு தைரியம் பிறக்கும்

வியர்வை படரிய கரங்களில்
வெற்றி இனிக்கும்
இலவயம் ஏற்காதே
இயன்றவரை உன்னுழைப்பால் வென்றிடு

இலட்சியத்தோடு நடந்தாய் என்றால்
இருள்கூட ஒளியாய் மாறிடும்
உழைக்கவே முடிவெடுத்தால்
இறைவனே துணையிருப்பான்

இயன்றவரை போராடு
இலவயம் பெறுவதற்காய் அல்ல
உன் உழைப்பில் உன் தியாக
அடையாளத்தை உருவாக்கிட

கவிஞர் முஹம்மட் நாபி ஷேபா கானம், பாலமுனை (இலங்கை)

ஒவ்வொரு
வளைவிலும்
கிடைத்துவிடுகிறது
இருக்கை;
ஒருவருக்குச்
சௌகரியமாய்,
மற்றவருக்கு
அசௌகரியமாய்!



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# பூமித்தாயின் குட்டித் தேவதை

பச்சை விரித்த புல்வெளி மேலே,
பிஞ்சுப் பாதங்கள் நடனம் ஆட,
வண்ண வாளியைக் கைகளில் ஏந்தி,
சின்னஞ்சிறுமி வருகிறாள் இங்கே!

வானவில் பூத்த வாளிக்குள்ளே,
ஆனந்தத் தீர்த்தம் அலைமோத,
செடிகள் எல்லாம் தாகத்தில் நிற்க,
தேவதை ஒருத்தி ஓடி வந்தாள்.

மெல்லச் சாய்ந்த வாளி வாய்வழி,
முத்துத் துளிகள் சிதறி விழ,
நனைந்த மண்ணின் வாசனை யாவும்,
நாசியைத் தீண்டிப் போனது அங்கே!

இதழோரத்தில் இதமான புன்னகை,
மலர்ந்த பூவை மிஞ்சும் அழகு,
தண்ணீர் ஊற்றும் அந்த விநாடி,
தன்னையே மறந்தாள் குட்டிப் பாப்பா!

தாகம் தீர்த்த செடிகள் யாவும்,
தலையை அசைத்து நன்றி சொல்ல,
மழலைச் சிரிப்பில் உலகம் யாவும்,
மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியதே!

பச்சை இலைகள் மின்னும் காட்சி,
குழந்தை மனதின் தூய்மைச் சாட்சி,
அன்பால் நனையும் இந்த உலகம்,
என்றும் அழகாய் மாறிடுமே!



கவிஞர் சுமிதா, நாகர்கோவில் (கன்னியாகுமரி மாவட்டம்)

# பெண் பூ

அந்தப் பெண்பூ உதிர்ந்த
அந்த நொடியிலா
நான் அங்கு வரவேண்டும்?

மேலடுக்குக் காலணிபோலும்
குத்திக் கிழிந்து அவளோடு
ஒட்டி உறவாடிக் கிடக்கிறது கீழ்.

எப்படி வலித்திருக்கும்?
உதிராத அந்த ஆண்பூவிற்கு
எனக்குமான வலி தொற்றிக் கொள்கிறது.

ஓங்கி ஓர் அறைவிட
வேண்டும் போலிருக்கிறது!
பூக்களைக் காயப்படுத்த
எனக்கு மட்டும்
உரிமை உண்டா என்ன?



அந்தப் பெண்பூவைப்
பொறுக்கவா? சேகரிக்கவா?
திரும்பிச் சிரித்துப் போகிறாள்;
அழும் இப்பூவுக்கு
ஆறுதலைத் தவிர
என்ன தரமுடியும் எனக்கு?

என்றோ புரட்டிப் படித்த
அந்தப் புத்தகத்தின் நடுபக்கத்தில்,
பத்திரமாய்ச் சேகரித்து
வைக்கிறேன்.
அவளையும்,
அவள் கால்பட்ட
இந்தப் பூவையும்!

இன்னும் இருக்கிறது
அந்தக் காதல்.
காய்ந்தும் பசுமையாய்!

கவிஞர் நாகா

நிலவின் ஒளி
நீலக் கடற்கரை
வெண்மணல்
பசித்த வயிறு
சிறு கடைகள்
சிற்றுண்டிகள்
தட்டில் தந்தவை
தனி ருசிதான்!

மதமில்லை அங்கே
சாதிபேதமில்லை
பாகுபாடே இல்லை
மனிதநேயம் இருந்தது!

பல்சுவை விருந்து
நட்சத்திர ஹோட்டல்
நாக்கிற்குச் சுவை - இது
மனதிற்கும் மருந்து!

கலகலவெனப் பேச்சுகள்
முகந்தெரியா உறவுகள்
மளமளவென நேரம் போக
இரவுக்கடை மூடியதே!



கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# மாற்றத்தின் விதை

எங்கும் மாற்றம்! எதிலும் மாற்றம்!
காணும் காட்சியிலும் மாற்றம்!
கற்கும் கல்வியிலும் மாற்றம்!
உண்ணும் உணவிலும் மாற்றம்!
உறவின் நட்பிலும் மாற்றம் வேண்டும்!

பேச்சினில் இனிமை கூடட்டும் - அன்பால்
பெருமிதம் கொண்டு வாழ்வோம்!
வீணாய்ப் பொழுதை விடுத்தே - பயனுறு
வினையில் மூழ்கி உயர்வோம்!

ஊரைச் சுற்றியே காலம் கழிக்காமல்
உயர்ந்த செயல்கள் செய்வோம்!
சோம்பல் போக்கி மானிடப் பிறவியை
மகத்துவம் மிக்கதாய் மாற்றுவோம்!

உள்ளமே உனது விளைநிலம் - அங்கு
நற்பண்பு ஏரால் உழுதிடு!
நல்விதை தூவிப் பயிரிட்டால் - அது
கனி தரும் மரமாய் உயர்ந்திடும்!

மாற்றத்தின் விதையை மனதினில் விதைப்போம்!
செம்மை யாகவே மனதை வைப்போம்!
உண்மை இதுவே என உணர்வோம்!




கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அமைதி தீபம் எங்கே?



ஆதிக்க வெறியும் மதவெறியும்
சமாதானத்தின்
ஈரக்குலையைத் தின்கிறது.

ஆதிக்கப் போரில்
சாதிக்கப் போவது என்ன?
சத்தியம் சாமரம் வீசும்
சமத்துவ பூமியில் சண்டையிட்டுத்
தலைமுறைக்குப்
போதிக்கப் போவது என்ன?
பாதிக்கப் போவது
பூமியின் உயிர்கள்தானே.

கண்ட இடங்களிலெல்லாம் இரத்தம்.
கலங்கித் தவிக்கிறது சித்தம்.
என்று ஓயும் அடங்காப் போரின் சத்தம்?
பூமிக்குக் கிடைக்குமா சமாதானத்தின் முத்தம்?

இருப்பவனும் இருப்பவனும்
மோதிக்கொண்டால்,
இல்லாதவன்தானே வறுமையால்
இளைத்துப் போவான்!

அன்பை இசையாய் வெளிப்படுத்தும்
ஆத்மாவின் அமைதிப் புல்லாங்குழலில்,
போரின் ஓலங்களா கேட்க வேண்டும்?

எண்ணற்ற கனவுகளுடன்
போனார்கள் பள்ளி;
ஏவுகணைகள் வைத்தன
அவர்கட்குக் கொள்ளி!
பற்றவைத்த நெருப்பு
பாகுபாடா பார்க்கும்?
இருதரப்பையும் எரிக்கும்.
இந்த உண்மை எப்போது உரைக்கும்?

அகம்பாவம் முடக்கிவிட்டு
அன்பைத் தொடக்கி வைத்து
அமைதி தீபம் ஏற்றுவோம்!

கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி

இன்பமோ
துன்பமோ
நாணயத்தை
சுண்டி விட மட்டுமே
உரிமை படைத்தவர்கள்
நாம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# உலகின் மாயையில் உயிர்!

ஒருமித்த இப்பயணத்துள்
ஒவ்வாமைகள் எத்தனையோ!
பயணங்கள் தொடருது வாழ்வினில்
பகலவனின் பயணமாய்!
முடிவில்லை இங்கே இவ்வுலகினில்
முற்றுப்புள்ளி இன்றியே
வாழ்வின் கடைசி பரியந்தமும்!

இறைவன் தந்தருளிய இவ்வாழ்வினிலே
தவிப்பு ஒருபுறம்
தனிமை ஒருபுறம்
இருபுறமும் கூரான உடைவாளாய்
மனதினை உருவக் குத்துவதேனோ!

காலத் தாமதங்கள்
பொய்யாக்கும் உண்மைகளை உலகில்!
கதைக்காத நாட்களில்
முப்பொழுதும் நினைவுகளில் காயங்கள்!

உள்மனப் பாரங்களை
உதிர்த்துவிட வழியில்லையே!
உதிர்க்க முற்பட்டால்
உயிரில்லையே உற்றுக் கேட்பதற்கு!

பொய்யான உலகில்
பொய் ஒன்றும் புதிதல்ல!
உளமாற எவரும்
உரைப்பதில்லையே பொய்க்கூற்றுகளை!

காலமும் சூழ்நிலையும்
கலைத்திடும் மனதின் ஓட்டங்களை!
கவனமாய் எதிர்கொள் மனமே
கவலையெனும் எதிரியை -
கவணில் கல் வைத்தாற்போல்!



கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

அறியா வயதில்
அறிந்த ஒன்றை
அறியாமல் இருந்திருந்தால்
அன்பும் பாசமும்
நிலைத்திருக்குமோ!



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# தேடிய கடவுள்

தனிமையில் தவித்திருக்கும்
கடவுளைப் பார்க்க
ஆலயம் சென்றேன்
அர்ச்சனைகள் காதில் ஒலிக்க
ஆபரணங்கள் மேனியைத்
தழுவி பரவசமூட்ட
மாலைகளும் மலர்களும்
மணத்தினை நிறைக்க
வேண்டுதல் கீதங்கள்
மனதினுள் வரங்களை நினைவூட்ட
தீப ஆராதனைகள்
தேகத்தை ஒளியூட்ட
உலகின் ஆதியும் அந்தமும்
நானென்ற இறுமாப்பில்
பாதைகளைத் துறந்திருந்த
கடவுள் தேடிக் கொண்டிருந்தார்
தனக்கான எதிர்காலத்தை.



கவிஞர் இளையவன் சிவா

# நெடுவாழ்க்கை!

இயற்கையின் முன்னே எள்ளளவே மனிதகுலம்!
வியத்தகு முறையில் வளர்ந்தெழும் விருட்சம்
விதைக்குள் உறங்கிடுதே முளைத்திடும் வரையில்!
பழங்களை உண்ட பறவைகளின் எச்சங்கள்
விழுந்த இடங்களில் விளைந்திடும் விருட்சங்கள்!
புத்தம்புது மொட்டுகள் நித்தமும் மலர்கிறதே!
எத்தனையோ இலைகள் நித்தமும் உதிர்வதும்
புத்தம்புது துளிர்கள் நித்தமும் உருவாதலும்
நெடுவாழ்வின் தொடர்ச்சி இயற்கையின் நீட்சி!
கடந்து போவதல்ல வாழ்க்கை! ஒவ்வொரு
நொடியையும் கடந்து வாழ்வது! விழுந்தாலும்
விடாமுயற்சியுடன் எழுந்து நடப்பதே நெடுவாழ்வு!
நினைவுகளால் நிரப்பப்பட்ட வாழ்வே நெடுவாழ்க்கை!
முழுமைபெற்ற காதல் முடியாமல் தொடர்ந்திருக்கும்
வாழ்வின் இறுதிவரை! காதல்தரும் நெடுவாழ்வு!
பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலமே
வரவாக நம்கணக்கில் வந்தமையும் வாழ்க்கை!
அடைக்கும் தாழில்லா அன்போடும், பண்போடும்
ஓடும் நீர்போல் இவ்வுலகில் வாழ்கின்ற
நொடிப் பொழுதும் நெடுவாழ்க்கை என்றுணர்வோம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# எட்டுகள் இடாத நெடுந்தூரம்

நான்கு சுவர் அறைக்குள்
எட்டிட்டுச் சலித்துப் போன கால்கள்,
நடக்கும் நெடுந்தூரத்தை
எதிர்பார்த்துக் காத்திருந்தன!
நெடுந்தூரத்தை அளந்து வந்த
கால்களைக் கண்டு
பொறாமையும் கொண்டன.

நாளடைவில் இடைவெளிகளை
அதிகமாக்கிக் கொண்டு,
சுவர் அறைக்குள் முடங்க முடியாமல் தவித்து,
நீண்ட தூரத்தை விருப்பமாய் நாடின.
பூட்டிய அறைக்குள்
எப்படி நுழைவதோ
அப்படித்தான் திடீரென
எப்படித் தூரத்தை நோக்கி நடப்பதோ?

தெரியவில்லை
ஆனால், நடந்தே ஆக வேண்டும் என்பதால்,
அறைக்குள்ளே எட்டுகளை முடித்து,
மீண்டும் மீண்டும் மிதித்து,
திரும்பித் திரும்பி நடக்கத் தொடங்கிய
கால்பாதங்களில் வலி எடுத்தது!

குறுகிய தூரத்தையே
பழக்கமாக்கிக் கொண்ட பாதங்கள்,
புதிதாய்த் தொடங்கிய பெரிய எட்டுகளுக்குப்
பழக்கமில்லாததால் அன்றோ
வலியைச் சந்தித்தன?
அறைக்குள் எட்டுகளை மிதித்து
நடப்பதற்கே இவ்வாறென்றால்,
எப்படி நெடுந்தூரத்தை நடந்து
விருப்பத்தை முடிக்க முடியும்?



இப்படித்தான் சில பொழுதுகள்...
ஒன்றினை நினைத்து
வெறுமனே தொடங்கியதில் - அதை
உறுதி செய்து முடிப்பதில்லை!
நெடுந்தூரத்தை நடந்து முடிப்பது என்பது
பசிக்கு உணவும்,
தாகத்திற்குத் தண்ணீரும்,
நிறைவில் வரும் ஏப்பமும் போல!

தொடங்கும் தூரத்தில் குதூகலிப்பும்,
தெரிந்தவர் தெரியாதவர் காணும்போது சிரிப்பும்,
புதிதான காற்றும் மரமும் இசைக்கும் மொழியில்
மனதில் ரசனையும் சேரும்போது
அது சலிப்பாக மாறுவதில்லை!
அப்படியான நெடுந்தூரங்கள்
கால்பாத வலியையெல்லாம்
பொருட்படுத்துவதே இல்லை!

கவிஞர் சஜ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# கன்னி மைந்தர்

விடியலைத் தேடி
சூழ்நிலையின் சூட்சுமமும்
வாழ்க்கையின் அச்சமும் - என்
தாய் தந்தையரின் கோட்பாட்டில்
குறைபாடு அது.


பொதுவுடைமைக் கோட்பாட்டில்
குருதியும் சிந்தும் அழிந்தது;
என் தாய் தந்தையரால் தடையின்றி
அவர்கள் கண்களுக்குப் புலப்படாத
புலன் விசாரணை அன்று.

தீண்டுதல் மோகம் இன்று
திரைக்காவியமாக மக்களிடையே;
மாண்டவர் மாயம் அன்றுமுதல் இன்றுவரை
மாயப் பின்னணியே!
இன்றும் மாறுபடாத மக்கள் பின்னணியில்.

போராடும் மைந்தர்களின் மனம்
என்றென்றும் மாறுபடாத இனம்;
இதுவே உலகத் தமிழர்களின் நிலம்
அதை மாற்ற முடியாத குணம்.

இஃது இக்கவிஞனின் மாபெரும் களம்;
கவிஞர் செல்லாவின் தளம்!
இதை தமிழ்நாடு என்றும் அறியாத குணம்.
இதை முன்பே சொல்லிவைக்கும்
செல்லாவின் மனம்.

நான்கு வரியிலும் நாளைய தீர்ப்பு உண்டு;
அதைக்கண்டு, அதைக்கொண்டு, அதைவென்று,
அது மக்களிடையே சென்று மாற்றத்தைக் கொண்டு,
விடியலைக் காணும் அன்று
இவன் விடியல் துறப்பான்.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# "போர்" வேண்டாமே!

உறக்கம் தொலைத்து
உணவை மறந்து
கலக்கத்தை விதைக்கும்!

கல்நெஞ்சுகளின் அகங்காரம் -
கரும்புகைக்குள் கனவுகளைத்
தொலைக்கும் மனிதர்கள்!
அடுத்து என்னவென்ற...

வாழ்வின் அடிப்படை
நகர்விற்கு ஏங்கும்
அவலத்தின் ஓசைகள்!

சிதறிய இரத்தத் துளிகளில்
விம்மத் தணியும் உயிர்கள்!

இளங்குருத்துகளை இரையாக்கி,
எதை நிலைநிறுத்த
இந்தப்பாரும் பதற்றமும்?

மனிதனே... மனமற்ற மனிதனே!
சிதைந்த பொம்மைகளைச்
சீராக்கித் தருமோ - உந்தன்
அணுவும் ஆற்றலும்?

அழிவைத் தூண்டும்
அதிகாரத்தின் அரக்கத்தனம்!
உயிருள்ள பொம்மைகள்
பல தவிப்பின் உச்சத்தில்!



சிதைத்துக் கலைத்துப் போட்டுப்
போர்நிறுத்தம் செய்வதில்
என்ன கண்டீரோ?
அதிகாரத்தின் பேராசைக்கு
அப்பாவி மக்களை அழிப்பீரோ?

போரில்லாத உலகம்,
பொறுத்தாளும் மனம் -
"போர்" என்ற சொல்லே
எவ்வுலகுக்கும் வேண்டாமே!

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டணம்)

## அதனாலேயே

தன்நிலை விளக்கம்
கொடுத்து கொண்டிருப்பதலாயே
நல்ல முடிவுகள்
நம் செயல்களால்
வருவதாலேயே
நமக்காக பிறர் பரிந்து
பேசுவதாலேயே
எதிர் வருபவற்றை
துல்லியமாய் கணித்து
சரியாய் திட்டமிடுவதாலேயே
விமர்சிப்பவரிடத்தில்
மாற்றம் ஏற்படபோவதில்லை
அனுமானங்களற்று
விருப்பு வெறுப்பற்று
மனசாட்சியின்படி
நடந்துகொள்ளும் வரை.

*******



## என்னதான்

புத்தி முன்னும்
இப்பவும் நாளைக்கும்
உடனடியாய் நகருதல்
ஆரோக்கியம் என்றாலும்
நடக்க வேண்டியவைகளை
யோசிக்கையில்
அன்னைக்கு அப்படித்தான்
எண்ணியது
சறுக்கியது செயலானது
தோற்றது என்று
கரும சிரத்தையாய்
ஞாபகப்படுத்துகையில்
கலக்கமும் பதட்டமும்
கொடுக்கிறது

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

அஸ்மாவுக்கு தன் அறை ஜன்னல் வழியாக வெளியே தெரியும் மங்கலான பகல் வெளிச்சத்தைப் பார்க்கும் போதெல்லாம், அவளது மனதிற்குள் ஒரு நீண்ட பெருமூச்சு தானாகவே உண்டாகும் இப்போதும் அப்படித்தான் இருந்தது. திருமணம் முடிந்து புது வாழ்க்கைத் துணையுடன் நிம்மதியாக வாழ்ந்தாலும், மனதில் இனம் புரியாத ஒரு பாரம் அவளை ஆட் கொண்டது. அவளின் கணவர் அப்துல்லாஹ் மிகவும் நல்லவர், அவள் மேல் அக்கறை உள்ளவர், தொழுகையை முறையாகப் பேணுபவர். தன் மனைவியை அவர் மரியாதையாக நடத்துகிறார். ஆனால், அஸ்மாவின் இதயத்தில் ஆழப் புதைந்திருந்த ஓர் தன் கனவைப் பற்றி அவரிடம் பேசுவதற்கு மட்டும் அவளுக்குத் துணிவில்லை.



அவளுக்குப் படிப்பதென்றால் கொள்ளைப்பிரியம். மற்ற அனைத்தையும் விட, ஓவியம் வரைவதில் அளவற்ற ஆர்வம் ஒரு நாள், ஒரு புகழ்பெற்ற ஓவியராக வரவேண்டும் என்பது அவளுடைய இளமைக் கனவாக இருந்தது. பள்ளியில் எல்லாக் கலைப் போட்டிகளிலும் அவள்தான் முதல் இடம் பிடிப்பாள். அஸ்மா இமைகளை மூடி தன் பள்ளி நாட்களை மீட்ட தொடங்கினாள்.

அஸ்மா பள்ளியில் அமைதியான, கூச்ச சுபாவமுள்ள மாணவி. மற்றவர்களுடன் பேச தயங்கும் அவளுக்கு கைகளில் பென்சிலோ தூரிகையோ கிடைத்தால் அவள் உலகம் மாறும். ஓவியம்தான் அவளது உயிர்த்துடிப்பு. வாராந்த ஓவிய வகுப்பிற்காக ஆவலுடன் காத்திருக்கும் அஸ்மா, டீச்சர் வரைவதைக் காட்டிலும் தன் கற்பனைகளுக்கு உருவம்

கவிதர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, (இலங்கை)

கொடுப்பதையே விரும்புவாள். ஒருமுறை, ஆசிரியர் வரைய சொன்னதை விட்டு மதீனாவின் பள்ளிவாசலை நுணுக்கமாக வரைந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினாள். அவளது தோழி பாத்திமா, அஸ்மாவின் திறமையைப் பாராட்டினாலும் அஸ்மா தைரியமின்மை காரணமாக அவள் அதை வெளிக்காட்ட பயந்தாள். பத்தாம் வகுப்பில், மாவட்ட அளவிலான ஒரு கலைப் போட்டிக்குச் செல்ல நடுங்கினாலும், ஆசிரியரின் வற்புறுத்தலால் சென்றாள். அங்கு ஓவியம் வரைவதற்காக தனித் தனி வெள்ளை அட்டைகள் தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் வழங்கப்பட்டன. அதைக் கண்டதும் அவளுள் அச்சம் எழுந்தாலும் அவள் வீட்டிலிருந்து வர முன் சுப்ஹ் தொழுது கையேந்தி பிரார்த்தனை செய்த புனித உணர்வு அவளுக்குள் வந்து, மனதை அமைதிப்படுத்தியது. அவள் மெதுவாக தைரியத்தை வரவழைத்து துணிவுடன் வரைந்து முதல் பரிசை வென்றாள் அது அவளது வாழ்வில் கிடைத்த மிக முக்கியமான அங்கீகாரமாக இருந்தது சதாரண பரீட்சையில் சித்தி பெற்றாலும் மேல் படிப்பு படிக்க போதுமான வசதி இல்லாததால் படிப்பை இடையில் நிறுத்தி விட்டாள் அப்துலின் தாய் அஸ்மாவின் நல்ல குணங்களை கவனித்து தன் மகனிற்கு பெண் கேட்கவும் நல்ல சம்பந்தம் என அஸ்மாவின் பெற்றோர் திருமணமுடித்து கொடுத்தனர். படிப்பு இடையில் நின்றாலும் அவளின் ஓவியக்கனவு இன்றும் மனதில் ஓரத்தில் இருக்கத்தான் செய்கின்றது. திருமணமுடித்து அவள் மறு வீடு செல்லும் போது அவங்க மனசு நோகாம நடந்துக்கோமா என தாய் சொன்ன வார்த்தையினாலும் தன் கூச்ச சுபாவத்தாலும் தன் கணவர் பேச்சை தட்ட கூடாது என்று தன் கனவை கூட வாய் விட்டு சொல்லாமல்அமைதியாய் இருந்தாள்.

ஜன்னலோரமாய் நின்றிருந்த அஸ்மா, தன் கனவுகளின் சுமைகளைச் சுமந்து, பெருமூச்சு விட்டபோது, கணவர் அப்துல் பள்ளிவாசலுக்குத் தயாராகி, செல்வதைக் கண்டவள் அவர் திரும்புவதற்குள் தன்னாசைகளை தன்னுள்ளே புதைத்து விடலாமா என அவள்

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, (இலங்கை)

எண்ணிய தருணத்தில், ஓர் ஆழமான உள்ளுணர்வு அவளை உந்தியது. இந்தத் தயக்கம் ஏன்? அல்லாஹ் தன் அடியார்களுக்கு தைரியத்தை அளித்திருக்கிறான். தொழுகைதான் அவளுடைய மனதிற்கு எப்போதும் அமைதியைத் தந்திருக்கிறது. அவள் விரைந்து எழுந்து, உளூ செய்துவிட்டு, தொழுகை விரிப்பைப் பிரித்தாள். மஃரிப் தொழுகைக்காக நின்றபோது, அவள் தன் மனதை இறைவனிடம் ஒப்படைத்தாள். "யா அல்லாஹ், நீ எனக்கு அளித்திருக்கும் இந்தத் திறமை, ஒரு நாள் என் பயத்தின் காரணமாக வீணாகிப் போய்விடக் கூடாது. என் கணவரைக் கொண்டு என் கனவுக்கு வழிகாட்டு, என் மனதிற்கு தைரியத்தைக் கொடு," என்று இறைஞ்சினாள். தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்தபோது, அவளது நெஞ்சில் ஒரு புதிய உறுதி பிறந்தது. அது பள்ளியில் மாவட்டப் போட்டிக்கான வெள்ளை அட்டையைப் பார்த்தபோது எழுந்த புனிதமான துணிவு. அப்போது அப்துல் பள்ளிவாசலில் இருந்து திரும்பி வந்து, கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. எப்போதும் தன் கணவரைப் பார்த்துத் தலையைக் குனிந்துகொள்ளும் அஸ்மா, அன்று நேராக நிமிர்ந்து நின்றாள்.

அப்துல் உள்ளே வந்ததும், அஸ்மாவின் முகத்தில் இருந்த புதுவிதமான தெளிவைக் கண்டு ஒரு கணம் தயங்கி நின்றார்.
"என்ன அஸ்மா? நீ இவ்வளவு அமைதியா இருக்கிறியே எதுவும் பிரச்சனையா?" என்று மென்மையாகக் கேட்டார் அப்துல்.
அஸ்மா, தனது உள்ளத்தில் பல வருடங்களாக அடைபட்டுக்கிடந்த வார்த்தைகளைத் வெளிப்படுத்த தயாரானாள். அவளது குரல் முதலில் தழுதழுத்தது, ஆனால் உறுதி உடையவில்லை

".. நான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும். ரொம்ப நாளா என் மனசுக்குள்ளேயே வெச்சிருக்கேன். இதச் சொன்னா நீங்க என்ன நினைப்பீங்களோன்னு எனக்கு பயமா இருந்துச்சு அதனால தைரியம்

இல்லாமப் போச்சு..." அவள் கண்களில் லேசான நீர் திரையிட்டது. அப்துல் அமைதியாக அவள் பேசுவதைக் கேட்டார். அஸ்மா ஒரு நீண்ட மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு, பள்ளி நாட்களில் ஓவியத்தில் தனக்கிருந்த அசாத்திய ஆர்வம், போட்டியில் வென்ற வெற்றி, ஒரு ஓவியராக வரும் கனவு இடையில் நின்ற படிப்பு என அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தாள். பேசி முடித்தபின், மீண்டும் தரையைப் பார்த்தபடி, அப்துல்லாஹ்வின் பதிலை எதிர்பார்த்து அச்சத்துடன் காத்திருந்தாள்

அப்துல் அவளிடம் அருகில் வந்து, அவளது கைகளைப் பாசத்துடன் பற்றிக்கொண்டார். "அஸ்மா... நீ எனக்கு ஏன் இவ்வளவு நாளா இதைச் சொல்லல? அல்லாஹ் நமக்கு அருளிய திறமையைப் பயன்படுத்துறதுல என்ன தயக்கம்? நீ பள்ளிவாசல்களை, புனித இடங்களை, இஸ்லாமியக் கலையை ஓவியமாக்கினால், அது ஒருவிதமான தஃவா அழைப்பபாகவும் இருக்கும் தானே?"

அப்துலின் வார்த்தைகள் அவளது காதுகளில் தேனாகப் பாய்ந்தன. "நான் உன்னைப் பத்தி எல்லாமே தெரிஞ்சுக்கணும்னுதான் கல்யாணம் பண்ணினேன். நீ பயப்படவேண்டாம். நம்ம வீட்டை நீ நிர்வகிச்சுட்டு, உனக்குப் பிடிச்ச மாதிரி கெடக்கிற நேரத்தை உன் கலைக்காகச் செலவிடலாம். உன்னோட கனவு நனவாக நான் உனக்கு உறுதுணையா இருப்பேன்" என்று சம்மதம் தெரிவித்தார்.

அப்துல்லாஹ்வின் சம்மதித்ததைக் கேட்டதும், அஸ்மாவின் கண்கள் ஆனந்தத்தில் நிறைந்தது. இன்று, தொழுகையும் தைரியமும் அவளுக்கு வாழ்வின் புதிய கதவைத் திறந்துவிட்டன. அப்துலின் உதவியுடன், அஸ்மா தனது வீட்டிலேயே ஒரு சிறிய கலைக் கூடத்தை அமைத்தாள். அவர் அவளுக்கு உயர்தர வண்ணப் பென்சில்களையும், எண்ணெய்த் தூரிகைகளையும், பெரிய கேன்வாஸ்களையும் வாங்கித் தந்தார். முதல்

வேலையாக, அஸ்மா ஆன்லைனில் இஸ்லாமியக் கலை மற்றும் காலிகிராஃபி (Calligraphy) குறித்த படிப்பில் தன்னை இணைத்துக்கொண்டாள்.

வருடங்கள் கடந்தன. அவள் தன் கனவுக்காக இரவும் பகலும் உழைத்தாள். கூச்ச சுபாவமுள்ள அந்தப் பெண், தனது படைப்புகள் மூலம் உலகத்துடன் பேச ஆரம்பித்தாள். அவளது ஓவியங்களில் இஸ்லாமியப் பண்பாட்டின் ஆழமான அமைதியும், மதீனாவின் மினாராக்களின் கம்பீரமும், குர்ஆனின் எழுத்துக்களின் அழகும் பளிச்சிட்டன. பத்து வருடங்களுக்குப் பிறகு, ஒரு குளிர்கால மாலையில், நாட்டின் முக்கிய கலைக்கூடம் ஒன்றில், அஸ்மாவின் தனிநபர் ஓவியக் கண்காட்சி வெகு விமர்சையாகத் திறந்து வைக்கப்பட்டது.



அஸ்மா புன்னகையுடன் தன் கணவர் அப்துல்லாஹ்வின் கைகளைப் பற்றிக்கொண்டாள். அவள் முகத்தைப் பார்த்த அப்துல்லாஹ், "அஸ்மா... நீ எப்போதும் சிறந்த கலைஞர்தான். நீ எதை மறைச்சு வெச்சிருந்தயோ, அதால இப்போ உலகம் உன்னை அறிந்து கொண்டது அல்ஹம்துலில்லாஹ்!" என்று பெருமையுடன் சொன்னார்.

இன்று, அஸ்மா ஒரு புகழ்பெற்ற இஸ்லாமிய ஓவியராகத் திகழ்ந்தாள். தைரியம் என்பது வெளியில் இருந்து வருவதில்லை, அது நம் ஈமானிலும் (நம்பிக்கை), நம் கனவுகளைப் பின்தொடரும் முயற்சியிலும்தான் இருக்கிறது என்பதை அவள் தனது வாழ்க்கையின் மூலம் உலகுக்கு உணர்த்தினாள்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, (இலங்கை)

## பிறப்பு, கல்வி



திருநெல்வேலி மாவட்டத்தில் கோயில்பட்டி அருகே இடைச்செவல் என்னும் ஊரில் செப்டெம்பர் 23, 1923-ல் குருசாமி-தாயம்மாள் ஆகியோருக்கு முதல் மகனாகப் பிறந்தார். தெலுங்கு பேசும் பொற்கொல்லர் குடியைச் சேர்ந்தவர்கள். இடைச்செவலில் கி.ராஜநாராயணன் வீடு இருந்த அதே தெருவில்தான் அழகிரிசாமியின் வீடும் இருந்தது. அவர்கள் இளமைக்கால நண்பர்கள். (தமிழகத்தில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த இருவர் சாகித்ய அகாதெமி விருது பெற்றது இடைச்செவலில்தான்).

அழகிரிசாமியின் குடும்பத்தில் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் வழக்கம் இருக்கவில்லை. இளமையிலேயே தொழில் பயிற்றுவிப்பார்கள். ஆனால் சிறுவனாக இருந்தபோது வீட்டுமுன் சாய்த்து வைக்கப்பட்டிருந்த ஒரு மாட்டுவண்டிச் சக்கரத்தில் ஏறிவிளையாடியபோது அது சரிந்து விழுந்து அழகிரிசாமியின் கை ஒடிந்தது. அதற்கு சரியான கட்டு போடாமையால் ஒரு கை செயலிழந்தது. ஆகவே அவரால் தொழில்செய்ய முடியாது என பள்ளிக்கு அனுப்பினார்கள். பல்வேறு உதவிகளால் பள்ளி இறுதி வரை அழகிரிசாமி படித்தார். இடைச்செவல் ஊரில் முதலில் பள்ளியிறுதிப் படிப்பை முடித்தவர் அவரே.

## தனிவாழ்க்கை

கு.அழகிரிசாமி கோயில்பட்டி அருகே ஒரு சிற்றூரில் அரசு உதவிபெறும் பஞ்சாயத்துபோர்டு பள்ளியில் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகச் சேர்ந்தார்.

**தனிவாழ்க்கை**

கு.அழகிரிசாமி கோயில்பட்டி அருகே ஒரு சிற்றூரில் அரசு உதவிபெறும் பஞ்சாயத்துபோர்டு பள்ளியில் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகச் சேர்ந்தார். சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுத்தர் வேலை கிடைத்தது. முப்பத்தைந்து ரூபாய் ஊதியம் அளித்த அந்த வேலை அன்று மதிப்பு மிக்கது. ஆனால் அவரால் அவ்வேலையில் ஈடுபட முடியவில்லை. வேலையில் இருக்கையிலேயே கதைகளை எழுதிக்கொண்டிருந்தார். அவருடைய கதைகளை வெளியிட்ட ஆனந்தபோதினி இதழின் ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் அவரை சென்னைக்கு வரும்படி அழைத்தார்.சென்னைக்குச் சென்ற அழகிரிசாமி அங்கே இதழாளர்களுக்கு அளிக்கப்பட்ட மிகச்சிறிய ஊதியத்தில் வாழமுடியாமல் மீண்டும் கோயில்பட்டிக்கே வந்து சார்பதிவாளர் அலுவலக வேலையை ஏற்றார். ஆனால் அந்த வேலையில் அவர் உள்ளம் செல்லவில்லை. எனவே மீண்டும் வேலையை துறந்து ஆனந்தபோதினி இதழில் சென்று சேர்ந்தார்.



1952-ல் கு.அழகிரிசாமி மலேசியா தமிழ் நேசன் இதழின் ஆசிரியராக சென்றார். 1955-ல் மலேசியாவில் இசைநாடகங்களை அவர் தயாரிக்கும் பணியில் இருந்தபோது இசையிலும் நடிப்பிலும் ஆர்வம் கொண்டிருந்த சீதாலட்சுமியை சந்தித்து காதல்கொண்டார்.

1957-ல் மனைவியுடனும் மகனுடனும் தமிழ்நாட்டுக்கு திரும்பிய அழகிரிசாமி காந்தி நூல்வெளியீட்டு கழகத்தில் மூன்றாண்டுகள் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1960 முதல் நவசக்தி இதழில்

துணை ஆசிரியராகச் சேர்ந்தார். 1965-ல் அப்பணியில் இருந்து விலகி 1970-ல் மறைவது வரை சுதந்திர எழுத்தாளராக வாழ்ந்தார்.

கு.அழகிரிசாமிக்கு இராமச்சந்திரன், ராதா ,சாரங்கராஜன் ,பாரதி என நான்கு வாரிசுகள். கு.அழகிரிசாமி மறைந்தபோது ஆறாம் வகுப்பு மட்டுமே படித்திருந்த சீதாலக்ஷ்மி தன் மகள் ராதாவிடம் இருந்து கற்றுக்கொண்டு மகளுடன் தானும் பள்ளியிறுதித் தேர்வு எழுதி வென்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வேலை பார்த்து தன் குழந்தைகளை படிக்கவைத்தார். அழகிரிசாமியின் நண்பராக இருந்த வி.எஸ்.சுப்பையா, அவ்வேலையை சீதாலட்சுமிக்கு வாங்கிக்கொடுத்தார். அழகிரிசாமி -சீதாலெட்சுமியின் மூத்த மகன் ராமச்சந்திரன் வங்கி மேலாளராக இருந்து ஓய்வுபெற்றிருக்கிறார், மூத்த மகள் ராதா மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்தவர். இளைய மகன் அ.சாரங்கராஜன் ஒளிப்பதிவுக் கலைஞர், கு.அழகிரிசாமி பற்றிய ஆவணப்படம் ஒன்றை எடுத்தவர். அழகிரிசாமியின் இளைய மகள் பாரதி மனநல மருத்துவர்.

## இதழியல்

1944-ல் ஆனந்தபோதினி இதழில் பணிக்குச் சேர்ந்த கு.அழகிரிசாமி அதை உதறிவிட்டு வந்து சில மாதங்கள் கோயில்பட்டியில் தங்கிவிட்டு மீண்டும் சேர்ந்தார். 1952 வரை ஆனந்தபோதினி, பிரசண்ட விகடன், தமிழ் மணி, சக்தி ஆகிய இதழ்களில் உதவியாசிரியராக பணியாற்றினார். இக்காலகட்டத்தில் கி.ராஜநாராயணனுக்கு எழுதிய கடிதத்தில் எட்டு ஆண்டு உழைப்பில் 125 ரூபாய் சம்பளத்தைக்கூட எட்டமுடியவில்லை என்றும் தனக்கு திருப்தியான எதையும் எழுதாததனால் 1952 வரை எவருக்கும் தன் பெயர் தெரியாது என்றும் அழகிரிசாமி வருந்துகிறார்.

1952-ல் கு.அழகிரிசாமி மலேசியாவில் தமிழ் நேசன் இதழின் ஆசிரியராக சென்றார். அவர் வாழ்க்கையில் இருந்த வறுமை மறைந்தது. 1952 முதல் 1957 வரை அவர் மலேசியாவில் வாழ்ந்த காலகட்டத்தில் மலேசிய இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கினார். 1957-ல் அழகிரிசாமி மலேசிய தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்தி எழுதிய தலையங்கம் அரசின் சீற்றத்துக்கு ஆளானபோது அழகிரிசாமியை தமிழ்நேசன் இதழ் பணிநீக்கம் செய்தது.

கு.அழகிரிசாமி இந்தியா திரும்பி 1960 வரை காந்தி நூல்களின் மொழிபெயர்ப்புத் திட்டத்தில் பணியாற்றினார். 1960 முதல் நவசக்தி இதழில் துணை ஆசிரியராகச் சேர்ந்தார். 1965-ல் அப்பணியில் இருந்து விலகினார்.1970-ல் தொ.மு.சி. ரகுநாதன் பரிந்துரையால் சோவியத் லேண்ட் இதழ் அவருக்கு ஆசிரியர் பொறுப்பை அளித்தது. ஆனால் மூன்று மாதங்களே அங்கு அவர் பணிபுரிந்தார். அதற்குள் அவர் நோயுற்று மறைந்தார்.

## இசைப்பணி

கு.அழகிரிசாமிக்கு மரபிசையில் ஆர்வமும் பயிற்சியும் இருந்தது. அவருடைய ஊரில் மணம் புரிந்திருந்த நாதஸ்வரக் கலைஞர் காருகுறிச்சி அருணாசலம் அங்கு வரும்போதெல்லாம் உடனிருந்து இசைகேட்டார். இசையறிஞர் விளாத்திக்குளம் சுவாமிகள் பாடுவதை கேட்க தொடர்ந்து அவருடன் தொடர்பில் இருந்தார். தமிழில் இசைப்பாடல்களை எழுதுவது, வழக்கொழிந்துபோன இசைப்பாடல்களை தேடித் தொகுப்பது ஆகியவற்றில் ஈடுபட்டதை அவருடைய கடிதங்கள் காட்டுகின்றன. அவர் மலேசியாவில் இருந்தபோது எட்டயபுரம் கடிகை நமசிவாயப் புலவர் இயற்றிய வல்லீ பரதம்' 'முக்கூடற்பள்ளு' ஆகிய இசைநாடகங்களை தயாரித்தார். தியாகராஜர், பாரதியார், கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை போன்றோரின் பாடல்கள் சிலவற்றை

ஸ்வரப்படுத்தியிருக்கிறார். அண்ணாமலை ரெட்டியாரின் 'காவடிச்சிந்தையும்' பதிப்பித்தார்.

## நூல்கள்

### நாவல்

- டாக்டர் அனுராதா
- தீராத விளையாட்டு
- புது வீடு புது உலகம்
- வாழ்க்கைப் பாதை
- சிறுவர் இலக்கியம்
- மூன்று பிள்ளைகள்
- காளிவரம்

### மொழிபெயர்ப்பு

- தர்மரட்சகன் (1950) (குஸ்தாவ் ப்ளாப்ர்ட் புதினம் ஜூலியஸ்)
- மாக்சிம் கார்க்கியின் நூல்கள்
- லெனினுடன் சில நாட்கள்
- அமெரிக்காவிலே
- யுத்தம் வேண்டும்
- விரோதி
- பணியவிட்டால்
- பலநாட்டுச் சிறுகதைகள் (1961, தமிழ் புத்தகாலயம்)

### நாடகங்கள்

- வஞ்ச மகள்
- கவிச்சக்கரவர்த்தி
- சிறுகதைத் தொகுப்புகள்
- அன்பளிப்பு
- சிரிக்கவில்லை
- தவப்பயன்
- வரப்பிரசாதம்
- கவியும் காதலும்
- செவிசாய்க்க ஒருவன்
- புதிய ரோஜா
- துறவு

### கட்டுரைத் தொகுப்பு

- இலக்கியத்தேன்
- தமிழ் தந்த கவியின்பம்
- தமிழ் தந்த கவிச்செல்வம்
- நான் கண்ட எழுத்தாளர்கள்

### கடித இலக்கியம்


- கு.அழகிரிசாமியின் கடிதங்கள்
- இதம் தந்த வரிகள்

## விருதுகள்

1970-ல் அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அகாதெமி விருது அவர் மறைந்தபின் வழங்கப்பட்டது.

## மறைவு

கு.அழகிரிசாமி முதுகெலும்பில் காசநோய் தாக்குதலால் ஜூலை 5, 1970-ல் மறைந்தார்.





நன்றி
https://tamil.wiki/wiki/

நாளை

# நமதே

## எந்த சூழ்நிலையிலும்
## நிமிர்ந்து நடக்க கற்றுக்கொள்
## உடலால் மட்டுமல்ல
## மனதாலும்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com